# ஆன்ம போதம்

## மங்கலம்

ஆத்ம போதமென்னும் நூலை அருளிய ஆசாரியனாகிய சங்கரன், அந்த ஆத்ம சொரூபத்திற்கு வேறான அன்னியன் ஆவானோ! எனது உள்ளத்தில் அந்த ஆத்மாவாகவே பொருந்தி இருந்து, இன்று தமிழில் அதைச் சொல்பவனும் அவனையன்றி வேறு யார்?

1. சென்ற பிறவிகளில், தவங்களினால் பாபம் நீங்கியவராய், பற்றுக்களிலிருந்து விடுபட்ட மனத்தினராய், சாந்தியோடு கூடி, பிறப்பென்னும் பந்தத்திலிருந்து விடுபட விரும்பும் முமுட்சுகளுக்கு அடையத் தகுந்தது ஆத்ம ஞானமாகும். அதை இந்த நூல் போதிக்கிறது.

2. சிறப்பாகச் சொல்லப்பட்ட பிற எல்லா சாதனங்களைக் காட்டிலும் ஞானம் ஒன்றே முக்தியை அடைவிப்பதற்கு நேரான முக்கிய சாதனமாகும். ஞானத்தினாலன்றி முக்தியை அடைய முடியாது. எப்படி நெருப்பில்லாமல் சமையலை செய்ய முடியாதோ அதுபோல.

ஸ்ரீ

# ஆன்மபோதம்

## பாயிரம்

(வெண்பா)

தான்மகிழ்ந்தெங் கோரமணன் சாற்றினுன் றன்னடியார்க்
கூன்மயல்சேர் பந்த மொழியவே — வான்மணிபோ
லாரியத்திற் சங்கரர்சொல் லான்மபோ தந்தமிழிற்
சீர்கலிவெண் பாவாச் சிறந்து.

– முருகனுர்

(கலிவெண்பா)

## மங்கலம்

ஆன்மாவின் போதமரு ளாசானுஞ் சங்கரனவ்
வான்மாவுக் கன்னிய னுவனே — வான்மாவா
யென்னகத் தேயிருந் தின்றுதமிழ் சொல்வானு
மன்னவ னன்றிமற் றுருளர் — முன்னல்

## நூல்

தவங்களினுற் பாவந் தவிர்ந்தவராய்ச் சாந்தி
யவிர்ந்தவரா யாசையறுந் தாராய்ப் — பவமுக்தி
யாதரமார்ந் தாருக் கடையத் தகுமான்ம
போதமா மீது புகலாகு — மோதிவ் 1

அறிவொன்றே நேர்முக்தி சாதன மாகும்
பிறசா தனங்களின் பேறு — மறிவின்றி
யாகாது முக்தியுற லக்கினியின் றிப்பாக
மாகாத வாறென் றறிவாய்நீ — மோக 2

3. மோகமாகிய அஞ்ஞானம் நீங்க வேண்டுமென்று அனுஷ்டிக்கப்படும் கர்மங்களனைத்தும் அஞ்ஞானத்திற்கு விரோதமன்று. ஆகையால் கர்மம் அறியாமையை தொலைக்காது. ஞானம். ஞானம் ஒன்றுதான் அறியாமை. அஞ்ஞானத்தை நாசமாக்குகிறது. பிரகாசமானது அடர்ந்த கும்மிருட்டைப் போக்குவது போல.

4. முழுதும் அறியாமையால் மறைபட்டது போல தோன்றும் ஆன்மா, அறியாமை சூழ்ந்தவுடன், மேகம் விலகியதும் பிரகாசிக்கும் சூரியனைப்போல ஒன்றாகி, பரிபூரணமாகப் பிரகாசிக்கும்.

5. உலகில் அஞ்ஞானத்தினால் கலக்கமடைந்து விளங்கும் ஜீவனை ஞானப் பயிற்சியினால் அதன் மனதில் படிந்த அழுக்குகளை எல்லாம் அழித்து முடிவில் தானும் அவற்றுடன் மறைந்துவிடும். எப்படி நீரை தெளிய வைக்க போடப்பட்ட தேத்தம் பொடியானது நீரைக் தெளியவைத்து அந்த நீரின் வண்டலுடன் தானும் படிந்து விடுகிறதோ அதுபோல.

6. மனதில் விருப்பு-வெறுப்பாதி குணங்களினால் விகாரப்பட்டுத் தோன்றும் சம்சாரத்தின் இருப்பானது; சொப்பன காலத்தில் எப்படி அது யதார்த்தமாக தோன்றுமோ அதுபோல அஞ்ஞானம் உள்ளவரை சத்தியமாக தோன்றும். தூக்கத்திலிருந்து விழித்தவுடன் சொப்பனம் பொய்யாவது போல ஞானம் தோன்றியவுடன் சம்சாரம் பொய்யாகும். பின்னர் கனவு நீங்கும்.

7. எத்தனைக் காலம் வரை தோன்றக்கூடிய அனைத்திற்கும் ஆதாரமான சுழிவற்ற பிரம்ம சொரூபத்தை விசாரித்து அறிந்து அத்துடன் ஒன்றுபடவில்லையோ அதுவரை பிரபஞ்சம் கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைப் போல, உண்மையாய்த் தோன்றி பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்று அறிந்திடு.

8. உலகம் தோன்றுவதற்கு முதற் காரணமாயுள்ள பரமேச்வரனிடத்தில்; தண்ணீரில் காணப்படும் நீர்க்குமிழிகள் போல, காணப்படும் இந்த உலகங்கள் எல்லாம் உண்டாகி, நிலைபெற்று, கடைசியில் அழிந்துவிடுகின்றன என்பதை உணர்வாய்.

9. முதற்பொருளான சச்சிதானந்த வடிவமாயும், சகல வஸ்துக்களின் உள்ளும் உள்ளவனாக உள்ள, உருவமற்ற பிரம்ம சொரூப நிலை தன்னில்; உலகமானது, மாற்றுக் குறையாத சொக்கத் தங்கத்தினால் செய்யப்பட்ட பலவித நகைகளின் தோற்றத்தைப் பேலல, பலவித உருவவேறுபாடுகளுடன்கூடிய உலகமாக தோற்றமளிப்பது எல்லாம்; அந்த பிரம்மத்திற்கு அன்னியமாகாது என்று அறிவாய்.

அறியாமைக் குப்பகை யன்றதனுற் கன்ம
மறியாமை தன்னை யகற்ரு — தறிவே
யழிக்குமறி யாமையொளி யந்தகா ரக்கும்
பொழிக்குமா றென்றே யுணர்வாய் — முழுதும் 3

அறியாமை யான்மறை வானதுபோ லான்மா
வறவேயஃ தேகம தாகி — நிறைவா
யிலகுமே தானு யிரியவே மேக
மிலகுமா தித்தனென வேநன் — குலகில் 4

அறியாமை யாங்கலக்க மாருமுயிர் தூய்தா
மறிவுப் பயிற்சியி ஞலவ் — வறிவு
மகற்றியறி யாமை யழியுமே நீர்மா
சகற்றுந்தேற் ரும்பொடியொப் பாய்த்தன் — னகத்து 5

விருப்புவெறுப் பாதி விகாரசம் சாரத்
திருப்புங் கனுவுக் கிணையஃ — துருப்படும்
போதுமெய் போலப் பொலியுமே போதமுதி
போததுவும் பொய்யாகிப் போம்பின்னர்க் — கேதமிலே 6

எவ்வளவு கால மெவைக்குமதிட் டானமா
மவ்வியய மாம்பிரம மாய்ந்தறித — லொவ்விடா
தத்துணைக் கால மகிலமுமெய் யாய்த்தோன்றுஞ்
சுத்திவெள்ளி போலத் துணிவாய்நீ — மொத்த 7

முதற்கா ரணமாய் முழுதினு தார
மதுவாம் பரேச னகத்தே — யுததி
யுதிகுமிழி கள்போ லுலகங்க ளெல்லா
முதித்திருந் தோயு முணர்வாய் — முதலவன் 8

சச்சிதா னந்தன் சகலத்து முள்ளுள்ளா
னிச்சனும் விஷ்ணு நிலைதன்னிற் — சொச்சமாம்
பொன்னிற் கடகாதி போலும்பல் தோற்றமெலா
மன்னிய மன்றென் றறிமுற்று — மன்னலுறும் 9

10. முழுதும் ஸ்திரமாக ஆகாயத்தில் எங்கும் நிறைந்து பிரகாசிக்கும் ஈசுவரன், தன்னில் தோன்றும் எண்ணில் அடங்கா சரீரங்களை அடைந்து சர்வ வியாபியான இறைவனும் அந்த உபாதிகளால் (தோற்றத்தால்) பின்னன்போல ஆகிறான். பேதமான உபாதிகள் நீங்கியதும் பூரணப் பொருளாகப் பிரகாசிக்கின்றான்.

11. ஆத்மாவினிடத்தில் கற்பனையாகத் தோன்றும் - சொல்லப்படுகின்ற, பலவித சரீர உபாதிகளை அனுசரித்தே பெயர், குலம், ஆசிரமம் முதலியன உண்டாகின்றன. நீரில் தோன்றும் கரிப்பு, உப்பு முதலான சுவைகள், சிவப்பு முதலான நிறங்களைப் போன்று ஆத்மாவில் நாமரூப பேதங்கள் கற்பனையாக தோன்றுகின்றன என்பதை அறிவாய்.

12. பலவாக பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐம்பூதங்களின் கலப்பின் காரியமானதும், இருவினைகளின் கலப்பினால் உண்டானதுமான ஸ்தூல சரீரம்-உடல், நெஞ்சைக் கலங்கச் செய்யும் துன்பங்களையும், சுக போகங்களையும் ஜீவன் அனுபவிப்பதற்கு உகந்த இடமாக இருக்கிறது.

13. உடலுக்குள்ளே நுண் பூதங்களிலிருந்து உண்டான ஐந்து பிராண வாயுக்கள், மனம், புத்தி, ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களாகிய பத்து கருவிகள், அடங்கியது சூக்ஷ்ம சரீரம். வற்றாத சுக துக்கங்களை அனுபவிப்பதற்கு கருவியாய் உள்ளது இந்த சூக்ஷ்ம சரீரம் என்று தெரிந்துகொள்.

14. மலமாகிய மாயா வடிவமாகி, தொடக்கமில்லாததும், இன்ன விதமானதென்று சொல்ல முடியாத அவித்தையே காரண சரீரம் என்று கூறப்படுகிறது. ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரம் என்று சொல்லப்பட்ட, இதினின்று வேறாக, உபாதியற்ற ஆன்மாவை அறிந்திடுவாய்.

15. நிர்மலமான ஸ்படிகமானது தன்னெதிரே வைக்கப்படும் கருப்பு, நீல வஸ்திரங்களின் சம்பந்தத்தால் அந்தந்த நிறமுள்ளதாகத் தோன்றும். அதுபோல சேர்க்கைகளாகிய ஐந்து கோசங்களின் கூட்டுறவால் அந்தந்த கோசத்தின் சொரூபமாக தோன்றுகிறது ஆத்மா.

16. மேன்மையற்ற ஐந்து கோசங்களுடன்கூடி அதன் உள்ளே பிரகாசிக்கும் ஆத்மாவை, திடமான சுருதி, யுக்திகளாலும், விசாரத்தாலும் ஆத்மாவுடன் சேர்ந்திருக்கும் பஞ்ச கோசங்களை ஒழித்து, உமியுடன் கூடிய நெல்லை நன்றாகக் குத்தி அரிசியைப் பிரித்தெடுப்பதுபோல, ஆத்மாவை பிரித்தறிய வேண்டுமென்று உணர்வாய்.

விண்ணிலே போல விளங்கீச னிற்றோன்று
மெண்ணி லுபாதி யிசைந்தவிபு — வண்ணலுமப்
பேத வுபாதிகளாற் பின்னன்போல் வானவை
போதலும் பூன்றப் பொருளாவா — னேதும் 10

பலவா முபாதிகள் பற்றியே நாமங்
குலமா சிரமமுதற் கொள்கை — சலத்திற்
சுவைநிற மாதிபோற் சுத்தவான் மாவி
லவைகற் பிதமா மறிக — கவையாய்க் 11

கலந்தபெரு மைம்பூத காரிய மாகுங்
கலந்தவினை சார்ந்த கலமாங் — கலக்கு
மிடரின்ப போக மெவையும் புசித்தற்
கிடமிவ் வுடலென் றிருப்பா — யுடலுள்ளே 12

வாயுக்க ளைந்து மனம்புத்தி யீரைந்தா
யேயுங் கருவிக ளேய்ந்தநுண் — காயங்
கலவாத நுண்பூத காரியமாம் போகத்
துலவாத சாதனமா மோர்வாய் — மலமாகி 13

ஆதியற் றிற்றென் றறையொணு வஞ்ஞான
மோதுவ ராதி யுபாதியா — யோது
முபாதிக ளாமூன் றுடல்களின் வேறு
யுபாதியி லான்மாவை யோரவ் — வுபாதிகளாம் 14

கோசங்க ளைந்துமுதற் கூட்டுறவா லான்மாவு
மாசிலதே யாயினுமவ் வம்மயநே — ரேசருவு
நீலபடா திக்கலப்பா னிர்மல மாம்படிகம்
போலவே யொட்டாப் பொருளாகு — மேலில் 15

உடற்பஞ்ச கோச வுமியாதி யோடுட்
சுடர்பரி சுத்தவான் மாவைத் — திடமான
வுத்தியினுற் குத்தி யொழித்தவற் றையரிசி
யொத்தறிய வேண்டு முணருள்ளே — யொத்ததாய் 16

17. எல்லாவற்றுள்ளும் ஒன்று சேர்ந்து பொருந்திய ஆத்மாவானது எப்போதும் எங்கும் நிறைந்து பிரகாசித்துக் கொண்டு இருந்தபோதிலும் எந்த இடத்திலும் ஆத்மா விளங்குவதில்லை (காணும்படி). ஸ்படிகம் போன்ற வஸ்துக்களில் கூர்மையான நுட்ப புத்தியிலே பூரண பொலிவுடன் ஆத்மா பிரகாசிக்கும்.

18. பற்றிக் கொண்டுள்ள தேகம், இந்திரியங்கள், மனம், புத்தி, அவித்தை இவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனாய், அவைகள் செய்யும் காரியங்களோடும், அனைத்திற்கும் சாட்சியுமாய் விளங்கும் ஆத்மாவை, அவைகளுக்கு அரசன்போல என்று அறிதல் வேண்டும்.

19. முன்னே, ஆகாயத்தில் வேகமாக ஓடும் மேகங்களைக் கண்டு, பகுத்தறிவில்லாதவன், சந்திரன்தான் வேகமாக ஓடுகின்றானென்று கூறுவதுபோல; மனம் முதலானவை செய்யும் தொழில்களைப் பார்த்த விவேகமற்றவன் ஆத்மாவை தொழில் செய்யும் கர்த்தாவகப் பார்த்திடுவான்.

20. ஈடில்லாத சூரியனின் பிரகாசமான ஒளியினால், உலக மக்கள் தமக்குண்டான வேலையைச் செய்வதுபோல, ஞானப்பிரகாச சொரூபமான ஆத்ம சைதன்யத்தை அடைந்து உடல், இந்திரியங்கள், மனம், புத்தி இவைகள் தமக்குண்டான விஷயங்களில் ஈடுபட்டு செயலாற்றிடுமென்று அறிவாய்.

21. மெய்போல் தோன்றும் பரிசுத்தமான ஆகாயத்தில் நீலம் முதலான நிறத்தைக் கற்பனை செய்வதுபோல தூய ஆத்மாவில் தேகம், இந்திரியாதிகள் இவற்றால் உண்டாகும் குணங்கள், நல்வினை-தீவினையாகிய இவையாவற்றையும் அவிவேவிகள் பிரமையினால் ஆத்மாவில் இருப்பதாகக் கற்பனை செய்வாரென்று கருத்தில் கொள்வாய்.

22. இழிவான மனம் என்னும் உபாதியினால்; செய்வது, அனுபவிப்பது இவற்றை அறியாமை மயக்கத்தினால் ஆத்மாவில் உள்ளதாக கருதுவது, நீரின் அசைவுகளை நீரில் பிரதிபிம்பமாகத் தோன்றும் வானத்திலுள்ள அசைவற்ற சந்திரனின் அசைவுகளாக கற்பனை செய்வது போலாகும்.

23. பலவான அன்பு, ஆசை, சுகம்-துக்கம் முதலானவைகளும், இவற்றைப் போன்றவைகளும், புத்தியின் இருப்பினால்தான் தோன்றுகின்றன. தூக்கத்தில் இல்லை. ஏகையால் அவைகள் புத்திக்கே சொந்தமானவைகளாகும். இதை ஆராய்ந்து அறிக. இவைகளை எல்லாம் ஆத்மாவிற்கு உண்டென்று சொல்லலாகுமோ?

எங்குமே யென்று மிருப்பினு மான்மாவு
மெங்குமே யான்மா விலகலிலே — துங்கமாம்
புத்தியி லேயே பொலியுநிழல் சொச்சமாம்
வத்துவிற் றேன்றும் வகையாகத் — தொத்தும் 17

உடல்கருவி யுள்ள மொடுபுத்தி மாயை
விடவே றவற்றின் விருத்தி — யுடனே
யெவைக்குமே சாட்சியா மென்றுமான் மாவை
யவைக்கரசன் போல வறிக — செவிமுன் 18

கருவி களின்றெழில் கண்டவவி வேகி
கருத்தன்போன் றான்மாவைக் காண்பன் — றுரிதமா
யோடுமே கங்கண் டுணர்விலி சந்திரனே
யோடுகிறு னென்பதை யொத்ததஃ — தீடில்லா 19

ஞானவொளி யான்மாவை நண்ணி யுடல்பொறிகண்
மானதம் புத்தியிவை மன்னுதமக் — கானதொழி
லாற்றிடுமா தித்த னவிரொளியான் மக்கடொழி
லாற்றுவது போலு மறிமெய்போற் — றேற்றமுறும் 20

தேகம் பொறிக டிகழ்குணங் கள்வினைக
ளாகுமிவை தூயசச்சி தான்மாவில் — மோகத்தாற்
கற்பிப்பர் சுத்த ககனத்தி னீலமுதற்
கற்பித்தல் போலக் கருதுக — வற்ப 21

மனமா முபாதி மருவுகர்த் தத்வ
வினமாய வற்றையறி வின்மை — யெனுமயலா
லான்மாவிற் கற்பிப்ப ரப்பலைவை நீர்தோன்றும்
வான்மதியிற் கற்பிக்கு மாறுபல் — பான்மை 22

விருப்பாசை துன்பின்பு மேலுமிவை போல்வ
விருப்பவாம் புத்தி யிருப்பா — லிருப்பில்லாத்
தூக்கத்தி லின்றதனுற் சொந்தமவை புந்திக்கே
யோர்க்குகவான் மாவிற்கா மோவெனவே — பார்க்கும் 23

24. காணும் சூரியனுக்குப் பிரகாசமும், நீருக்கு குளிர்ச்சியும், நெருப்புக்கு உஷ்ணமும் எப்படி இயல்பானதோ, அப்படியே ஆன்மாவுக்குச் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும், நித்தியமாக, நிர்மலமாக இருப்பதுவும் சுபாவத்திற்கு ஒத்ததாகுமென்று அறிவாய். இது இயல்பானதும் ஆகும்.

25. இருப்பாகிய சத்துருவம், அறிவாகிய சித்துருவம் என்று சொல்லப்படும் ஆன்ம சைதன்ய அம்சத்தையும், புத்தியின் விருத்தி என்று சொல்லக்கூடிய ஒன்றையும் பொருத்தி ஒன்றாய் இணைத்து அறியாமையால், 'நான் அறிகின்றேன்' என்று ஒருவன் செயல்படுகிறான் என்பதை அறிவாயாக.

26. எவ்விதத்திலும், எக்காலத்திலும் ஆத்மாவானது எந்த விகாரமும் அடையாது. புத்திக்கும் அறிவு என்பது கிடையாது. இருந்தபோதிலும் நானென்னும் பாவத்துடன் ஒன்றுபட்ட ஜீவனானவன் எல்லாவற்றையும் நான் தெரிந்து கொள்கிறேன், செய்கிறேன், பார்க்கிறேன் என்ற பாவத்தினால் மிகுந்த மோகமடைகிறான் என்பதை அறிவாயாக.

27. பிரமையினால் கயிற்றை பாம்பென்று எண்ணுவதுபோல, ஆத்மாகிய தன்னை ஜீவனென்று நினைத்து பயத்தை அடைகிறான். அழிவற்ற உள்ள பொருளாகிய தன்னை; தான் ஜீவன் அல்ல, பரமாத்ம சொரூபம் என்று அறிந்து தேர்ந்துவிட்டால் பவபயம் நீங்கப் பெற்று அவன் அஞ்சாதவனாவான்.

28. ஒளிமிகு விளக்கானது சட்டி, பானை, குடம் முதலியவற்றைக் காட்டுவது போல (பிரகாசத்தால்) ஆத்மாதான், மனம், புத்தி, இந்திரியாதிகளை பிரகாசிக்கச் செய்கிறது. ஒளியற்ற ஜடமான புத்தி முதலியவற்றால் ஒருநாளும் ஆத்மா ஒளிர்விக்கப்படுவதில்லை என்று உணர்வாயாக.

29. ஒளிவீசும் விளக்கை காண்பதற்கு வேறு ஒரு விளக்கை தேடாத விதம்போல அறிவு வடிவாக பிரகாசிக்கும் ஆன்மாவானது தன்னை அறிவதற்கு வேறொரு அறிவைத் தேட வேண்டியதில்லை.

30. பிற பலவகை வழிகளான தேகம் நானல்ல, இந்திரியங்கள் நானல்ல போன்ற சகல உபாதிகளையும் நீக்கிவிட்டு, எஞ்சியுள்ள ஜீவான்மா, பரமான்மா ஆகிய இரண்டின் அபேதத்தை சொல்லும் மகாவாக்கியங்களின் பொருளை நன்கு ஆராய்ந்து தெளிவாய்.

அருக்கன் றனக்கொளி யப்புக்குத் தட்ப
மெரிக்குட் டணமு மியல்பா — யிருக்கையெனச்
சத்துச்சித் தானந்தஞ் சார்நித்தஞ் சுத்தமியல்
பொத்ததான் மாவுக்கென் றோரைந்தா — மத்தகையுள் *24*

சத்துச்சித் தென்னத் தகுமான்ம வம்சமும்
புத்தி விருத்தி புகலொன்று — மொத்த
விரண்டோடு மூடத்தால் யானறிகின் றேனென்
றொருத்தன் றெழிற்படுவ னோர்வா — யொருவிதத்தும் *25*

என்றும் விகார மிலதான்மா புத்தியு
மென்றுமறி வின்றியதே யென்றாலு — மொன்றிய
சீவனே யெல்லாந் தெரிவான்செய் வான்காண்பான்
பாவத்தான் மாமோகி பார்சத்தாய் — மேவுறும் *26*

தன்னைத்தான் சீவனெனத் தாம்பிலே பாம்புபோ
லுன்னியே யச்ச முறுகின்றான் — றன்னைத்தான்
சீவனலன் யான்பரமான் மாவென்று தேர்ந்ததனு
லாவனஞ் சானு யவனெளி — மேவும் *27*

ஒருபொருளா மான்மா வொளிர்க்கு மதிமுன்
கருவிகளைத் தீபங் கடாதி — பொருவ
வொளியி லவற்றா லொருபோது மான்மா
வொளிர்க்கப் படாதென் றுணர்வா — யொளியார் *28*

விளக்கி னுருவை விளக்கிட வேறு
விளக்கை விரும்பா விதம்போல் — விளங்கு
மறிவுருவா மான்மா வறிந்திடத் தன்னைப்
பிறிதறிவு வேண்டப் பெறாது — பிறிதவை *29*

நேதிநேதி வாக்கினு னீக்கி யுபாதியெலா
மீதியாஞ் சீவான்மா மீதிலா — வாதியா
மப்பரமான் மாக்களி னைக்கியமா வாக்கியங்கள்
செப்புவ தோர்ந்து தெளிந்திடுக — வப்பொய் *30*

31. பொய்யான அவித்தையினால் உண்டாகி காணப்படுகின்ற தேகம் முதலான யாவும் நீர்க்குமிழிபோல அழித்துவிடும். இவை நானல்ல. இவற்றிலிருந்து வேறுபட்ட நிர்மலமான பிரம்மமே நான் என்று சோர்வு அடையாது என்று எப்போதும் உணர்வாய்.

32. உயிராகிய 'நான்' தேகங்களுக்கும் வேறுபட்டவன். அதனால் எனக்கு பிறப்பு, முதுமை, இளைப்பு, சாவு முதலிய எந்த விகாரங்களும் பொருந்தாது. சப்தம் போன்ற இந்திரிய விஷயங்களோடு பொருந்தியிருப்பதும் எனக்கில்லை. அந்த இந்திரியங்கள் நானல்ல. ஆகையினால் அவைகள் எனக்கில்லை.

33. சலனமுறும் எண்ணங்களின் உருவமாகிய மனம் நானல்ல. ஆதலினால் இன்பம்-துன்பம், ஆசை, கோபம், பயம் யாவும் என்னைச் சேராத இனங்களாகும். நான், பிராணனும் அல்ல. மனமுமல்ல, தூய்மையானவனென்று வேதம் கூறுவதை நீ உணர்ந்து தெளிவாய்.

34. பல பெயர்களை உடைய ஆத்மாவாகிய நான் குணமில்லாதவன், பற்றென்றும் அழுக்கற்றவன் என்றும் உள்ளவன், உருவமற்றவன். மாறுபாடற்ற பரிசுத்தமானவன். கிரியை, சங்கல்பம், விகல்பம் அற்றவன் என்றும் விடுபட்டவன் என்று சொல்லப்படும் இவை யாவும் நானே என்று அறிவாய்.

35. தூய ஆகாயத்தைப்போல யாவற்றின் உள்ளும், புறமும் வியாபித்துள்ளவனும், மரணமில்லாதவனும், எங்கும் சமமாக இருப்பவனும், என்றுமுள்ள சித்தனும் ஆவேன். சரீரங்களில் பற்றில்லாதவனும், நிர்மலமானவனும் எங்கும் நிறைந்திருப்பவனும் ஆதலால் சலிக்க முடியாதவனும் ஆவேன் 'நான்' என்று அறிவாய்.

36. எந்தப் பொருளானது நித்தியமாய், பரிசுத்தமாய், ஏக சொரூபமாய், பூரண ஆனந்தமாய், இரண்டற்றதாய், சத்திய-ஞான சொரூபமாய், எல்லையற்று முடிவில்லாததாய் பிரகாசிக்கிறதோ அந்த பரப்பிரம்ம சொரூபமே நானாக உணர்ந்திடுவாய்.

37. தினமும் நானே பிரம்மமாவேன் என்ற பாவத்துடன் செய்யப்படும் தியான பலத்தினால் ஏற்படும் உறுதியானது. தேகத்திற்கு உண்டாகும் தீராத நோய்களைத் தீர்க்கும் மாமருந்தான இரசாயனத்தைப் போன்று, பிரம்மையினால் ஏற்பட்ட அறியாமையை (ஆவரண, விஷேபங்களை) அழித்துவிடும்.

அவித்தையா லானவை யாகமுதற் காணு
மிவைகுமிழி போலவழி வெய்து — மிவற்றி
னயலா மமல வகம்பிரம மாமென்
றயராம லென்று மறியா — னுயிரில் *31*

உடலுக்கு வேறெனக் குண்டாதன் மூத்த
லொடுகுன்றல் சாவுமுத லொன்று — படர்ந்த
வொலிமுற் புலன்களோ டொன்றலெனக் கின்றே
யலன்பொறிகள் யானுத லாலே — சலன *32*

மனமலனு னுதலான் மன்னுதுய ராசை
சினமச்ச மாதியெனைச் சேரா — வினமாக
வப்பிரா ணன்மனமில் லான்சுத்த னென்றுமறை
செப்புகின்ற தன்றோ தெளிபலவா — மப்பெயர்கள் *33*

நிர்க்குணனி ரஞ்சன னித்த னிராகார
னிர்விகா ரன்சுத்த னிட்கிரிய — னிர்விகற்ப
னித்தமுக் தன்முன் னிகழ்த்திடப் பட்டவை
யத்தனையு நானென் றறிபரி — சுத்தமாம் *34*

ஆகாயம் போல வகிலத்தி னுள்வெளியான்
சாகாதான் சர்வ சமன்சித்தன் — றேகாதி
யாவற்றும் பற்றற்று னென்றுமம லன்சலியா
னுவனு னென்றே யறியது — வாவை *35*

எதுநித்தஞ் சுத்த மெதுமுக்த மேக
மெதகண்ட வின்பிரண் டில்ல — தெதுசத்துச்
சித்தனந்த மாகுந் திகழப் பரப்பிரம
வத்துயா னேயா மதித்திரு — நித்தம் *36*

நிரந்தரமிவ் வாறு நிகழ்த்தப் படுமப்
பிரமமே யானுவ னென்னு — முறுதி
யழிக்குமறி யாமை யலைவுகளை நோய்க
ளொழிக்குமிர சாயன மொத்து — விழுப்பமாம் *37*

38. சுத்தமான தன்மையான ஒரு இடத்தில் இருந்து கொண்டு, எதிலும் ஆசையற்றவனாய், இந்திரியங்களை வெளிநோக்கிச் செல்ல விடாது தடுத்து, அவற்றை வென்று வேறெந்த விஷயத்திலும் செல்லாமல் ஏகாக்ர புத்தியுடன் ஏக சொரூபமான எல்லையற்ற ஆன்மாவை தியானிக்க வேண்டும் என்று அறிவாய்.

39. சிந்தித்து, நிச்சயித்த புத்தி உடையவன் பொருள்கள் யாவற்றையும் ஆத்மாவாகிய தனக்கு அன்னியமானவை அல்ல என்று புத்தியால் நிச்சயித்து, அவற்றை தன்னில் ஒன்றுபடுத்தி தூய ஆகாயத்தைப் போல ஒன்றாக விளங்கும் ஆத்மாவையே எப்போதும் தியானம் செய்ய வேண்டும்.

40. இவ்வாறு எண்ணி ஆத்மாவை உணர்ந்தவன், பொருள்களின் உருவம், குணம், நிறம், முதலான பலவாகவுள்ள வேற்றுமைகளை அகற்றி உள்ளத்தில் பிரகாசிக்கின்ற எங்கும் நிறைந்த பூரண, ஞானானந்தமே தானாக உணர்ந்து எப்போதும் விளங்குகிடுவான் என்று தெளிந்திடுவாய்.

41. விளக்கமாக அறிந்து கொள்பவன், அறிவதற்குரிய ஞானம், அறியப்படும் பொருள் இந்த பேதங்களும் இருப்பாகிய ஆத்மாவில் சம்பவிக்காது. ஏனெனில் பரம்பொருளானது அறிவாகவும், ஆனந்தமாகவும், அத்துவிதமாகவும் பொருந்தி இருப்பதினால் வேறு அபேட்சையின்றி தன் அறிவினால் தானே சுயமாய் பிரகாசிக்கும் என்று உணர்வாய்.

42. உள்ளே அந்தக் கரணமென்னும் ஜீவான்ம அரணிக் கட்டையில், பிரம்மமே நான் என்ற பாவனையுடன், உள்முக தியானத்தினால் தன் முயற்சியோடு நிரந்தரம் கடைவதினால் உண்டான ஞானாக்னியானது மடமையும் விறகை சுட்டு பொசுக்கி சாம்பலாக்கிவிடும்.

43. அருணோதயமானவுடன் முந்திக் கொண்டு இருட்டு அகன்று விடுவது போல, முதலில் தோன்றிய ஞானத்தினால், அஞ்ஞானம் நீங்கியதும் ஆத்மா பரிபூரணமாகப் பொலியும். அது இருள் விலகியதும் மறைப்பற்று ஒளிவீசும் சூரியனைப் போல எனலாம்.

44. தெளிவான ஆத்மாவானது தன்னால் எப்போதும் அடையப்பட்ட பொருளேயானாலும், அவித்தையினால் தான் ஆத்மாவை அடையாதது போல தோன்றுகிறது. அஞ்ஞானம் அழிந்ததும் ஆத்மா புதிதாக அடையப்பட்டது போலப் பிரகாசிக்கிறது. அது தன் கழுத்திலுள்ள ஆபரணத்தை மறந்துவிட்டு வீடு முழுவதும் தேடும்போது விவரமறிந்த நண்பன் அது அவன் கழுத்திலேயே இருப்பதைச் சுட்டிக் காட்டியதும் புதிதாக அடைந்தது போலகும்.

ஏகாந்த தேசத் திருந்தாசை யின்றிவெளி
போகாது வென்று பொறிகளை — யேகமா
யந்தமி லான்மாவை யன்னியமில் புந்தியனுய்ச்
சிந்திக்க வேண்டுந் தெரியிங்ஙன் — சிந்திக்கும் 38

புத்திமான் காணும் பொருளெவையு மான்மாவிற்
புத்தியா லொன்றல் புரிவித்தே — சுத்தமாம்
விண்ணென வொன்ருய் விளங்கிடு மான்மாவை
யெண்ணுக வெப்போது மேயிவ்வா — றெண்ணியே 39

உள்ள துணர்ந்தோ னுருவம் வருணமுத
லுள்ள மயல்க ளொருங்கொழித் — துள்ளந்
திகழ்பரி பூன்ற சிதானந்தந் தானுத்
திகழ்ந்திடுவ னுளுந் தெளிக — நிகழும் 40

அறிவா னறிவோ டறிபடுவ பேத
முறுபரமான் மாவி லுருதே — யறிவின்
புருவாயொன் ருயஃ துறுவத ஞற்றன்
னுருவாலே தானெளிரு மோர்க — வுருவுள்ளே 41

ஆன்மா வெனுமவ் வரணியி லிவ்வித
மான்மத் தியான வகமதனந் — தான்முயன்று
சந்ததஞ் செய்தலாற் சார்ஞானத் தீமடமை
யிந்தனமெல் லாமெரிக்கு மேயெறிக்க — முந்தும் 42

அருணனு லேயல் லகலுதல் போன்முன்
மருவறி வாலம் மடமை — யிரியவே
பொங்குமான் மாபரி பூரண மாகவே
பொங்குமா தித்தனைப் போலவே — மங்கலிலா 43

ஆன்மாவெப் போது மடைந்துளதே யானுலுந்
தான்மடமை யாலடையா தாயமரு — மான்மடிய
வெய்தப்பெற் ருற்போ லிலகுந்தன் கண்டவணி
யெய்தப்பெற் ருற்போல வேயென்று — மெய்தும் 44

45. இருட்டில் மரக்கட்டையானது திருடனாகத் தோன்றுவது போல, பிரமையினால் சுத்தப் பிரும்மத்தில் ஜீவன் கற்பனையாகத் தோன்றுகிறான். அந்த கற்பனை உருவத்தின் உண்மைத் தத்துவம் எதுவென்று ஆராய்ந்து உணர்ந்தால் பொய்த் தோற்றம் மறைந்துவிடும் என்ற உண்மையை அறிவாயாக.

பிரமத்திற் சீவன் பிராந்தியாற் கட்டை
புருடன்போற் கற்பிதன் பொய்யா — முருவத்தின்
றத்துவம் யாதென்று தானுணரி னவ்வுருவம்
வத்துவா காது மதியுள்ள — வத்துவாம் 45

46. உண்மைப் பொருளாகிய பிரம்ம சொரூப அனுபவத்தினால் உண்டான மெய்ஞ்ஞானமானது பொய்த் தோற்றமான அகங்காரத்தையும், நான், எனதென்னும் மமகாரத்தையும் நாசமாக்கி விடுகிறது. இருட்டில் வழிதவறியவன் திசைகளை அறிய முடியாமல் தவித்த திக்பிரமை, சூரியன் உதித்ததும் எப்படி நீங்கி விடுமோ அதுபோல என்று அறிவாய்.

தத்துவசொ ரூபானு பூதியாற் றுனுதி
யுத்தம ஞான முடனேயம் — மித்தையா
நானெனதஞ் ஞான நசிப்பிக்குந் திக்பிரமை
பானுவுத யத்தெனவே பார்க்கவே — தானொளிரும் 46

47. தானே ஒளிவிடும் தன்னை, ஒன்றாக அறிந்து விஞ்ஞானியான யோகி, காணக் கூடிய பிரபஞ்சமெல்லாம் தன்னிடம் இருப்பதையும் ஒன்றேயான ஆத்மாவான தானே எல்லாமாக இருப்பதையும், பேதமற்ற தனது ஞானக் கண்ணினால் காண்பானென்று உறுதியுடன் அறிவாய்.

நன்று தனையறிவிஞ் ஞானியாம் யோகியு
மொன்றுமெலாந் தன்னி லுறுவதை — யொன்றுன
தானெல்லா மாயுளதைத் தன்ஞானக் கண்ணிஞற்
றுன்காண்ப னென்றே தரிபரி — பூன்றமாம் 47

48. பரிபூரணமான ஆன்மாவே இந்த உலகம் ஆகும். அதற்கு அன்னியமாக எந்த ஒரு சிறிய பொருளும் இல்லை. சட்டி, பானை முதலானவற்றைப் பார்க்கும் போது அவைகளை மண்ணிற்று வேறானதாகப் பார்ப்பதுண்டோ? சொல். அதுபோலவே ஞானி சகல சராசர பிரபஞ்சத்தையும் ஆத்மாவாகப் பார்க்கிறான்.

ஆன்மாவே யிவ்வுலகெல் லாமாகு மற்பமு
மான்மாவுக் கன்னிய மாயில்லை – யான்மாவாய்க்
காண்பனெல் லாமுங் கடாதிகள்மண் ணின்வேறுய்க்
காண்பது முண்டோ கழறுக — காண்குறும் 48

49. காணும் பிரபஞ்சத்தை நன்கறிந்த ஜீவன் முக்தனான வித்வான், பூர்வ வாசனையால் தனக்கேற்பட்ட சரீர உபாதிகளையும், குணங்களையும் நீக்கி தனது உண்மை வடிவான சச்சிதானந்த சொரூபத்தை அடைந்திடுவான். எப்படி வண்டால் கொட்டப்பட்ட புழு, வண்டை நினைந்து அதன் உருவத்தை தான் அடைகின்றதோ அதுபோல என்று அறிவாயாக.

சீவன்முக் தன்வித்வான் றேருவதன் முன்றன்னை
மேவு முபாதிகுணம் விட்டுடனே — மேவுவான்
றன்னுருசச் சித்தின்பைத் தான்கீடம் வண்டினுருத்
தன்னையுறல் போலத் தரிதாஞு — மன்னுமவன் 49

50. மாயா, மோகமென்னும் சமுத்திரத்தைத் தாண்டி வந்து, மனதில் எழும் பற்றுகள், துவேஷங்கள் முதலான அசுரர்களை அடியோடு அழித்து, அந்த யோகியானவன் சாந்தியுடன் கூடி, ஆன்மாவினிடத்திலேயே இன்பத்தைச் சுகித்தவாறு பிரகாசித்திடுவான் என்று அறிவாயாக.

மோகக் கடல்கடந்து மூளாசை கோபமுத
லாகு மரக்க ரறக்கொன்று — யோகி
யமைதி யொடுகூடி யான்மாவி னின்பத்
தமைந்தொளிர்வ னென்றே யறிவா — யமைவில் 50

51. அமைந்த அநித்தியமான விஷய சுகங்களில் ஈடுபடுவதில் ஆசையற்றவனாய் ஆத்மானந்த இன்பத்திலேயே திருப்தி உள்ளவனாய், குடத்திலிட்ட விளக்குபோல எப்பொழுதும் தன் ஒளியினாலே, தனக்குள்ளே, தானாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பவன் ஞானி ஆவான்.

அநித்தவெளி யின்பிச்சை யற்றுஞு யான்மா
தனின்பிற் றிருத்தி தனையுற் — றனிசமுந்
தன்னொளி யாற்குடந் தன்னுள் விளக்கெனத்
தன்னுளே தானொளிர்வன் றுஞக — மன்னும் 51

52. தன்னில் நிலைத்த ஞானியானவன் சரீர உபாதிகளுடன் (மனம், புத்தி) கூடி இருந்த போதும் மற்ற நான்கு பூதங்கள் ஆகாயத்தில் ஒட்டாததுபோல, உபாதிகளற்று, முற்றும் உணர்ந்த மூதறிஞனாய் இருந்தாலும், ஒன்றும் அறியாதவனைப்போல காற்று எப்படி தன் இஷ்டம்போல வீசுகிறதோ அப்படி, எதிலும் பற்றின்றி உலகில் சஞ்சாரம் செய்வான்.

53. உலகில் பற்றிய சரீர உபாதி அறிந்ததும் ஞானியானவன், நீரில், நீரைக் கலந்தது போலவும், ஆகாயத்தில் ஆகாயம் கலந்தது போலவும், அக்னியில் அக்னி கலந்தது போலவும், தானும் எந்த உபாதியும் அற்று எங்கும் நிறைந்த பரப்பிரம்மத்தின் உள்ளே ஒன்றாகக் கலந்திடுவான் என்று தேர்ந்திடுவாய்.

54. தூய்மையான எந்த வஸ்துவை அடைந்தபின்பு அடைய வேண்டியது வேறு ஒன்றும் இல்லையோ, எந்த இன்பத்தைக் காட்டிலும் உயர்ந்த இன்பம் வேறு இல்லையோ, எந்த அறிவைக் காட்டிலும் உயர்ந்த அறிவு வேறு இல்லையோ அந்த வஸ்துவை பிரம்மமென நிச்சயித்து அடைவாயாக.

55. எந்தப் பொருளைத் தன் சொரூபமாகப் பார்த்தவனுக்கு பிறகு பார்ப்பதற்கு எதுவும் இல்லையோ, எந்த சொரூபமானது தன் சொரூபமாகிவிட்டால் பிறப்பு என்னும் சம்சார பந்தமில்லையோ, எந்தப் பொருளை அறிந்த பிறகு அறிய வேண்டிய பொருளில்லையோ, அப்படிப்பட்ட பொருள்தான் பிரம்மமாகும்.

56. மேலும் எந்த வஸ்துவானது குறுக்கிலும், மேலும், கீழும் எங்கும் நிறைந்திருப்பதாகவும், எது சச்சிதானந்த சொரூபமாய் இரண்டற்றதாகவும்; முடிவுற்று, எல்லையில்லாது, அழிவற்ற, நித்தியமான, அத்துவிதமாய் இருந்து எது பிரகாசிக்குமோ அதுவே பிரம்மமாகும் என்ற நிச்சய புத்தியுடன் மதித்திடுவாய்.

57. நித்தியமான அந்த வஸ்துவைச் சொல்லும்போது இதுவல்ல, இதுவல்ல என்று வேத முடிவான உபநிஷத்துக்கள் விளக்குகின்றனவோ, எது அழிவற்று, இடையறாத இன்பமாகி, இயல்பாக பொருந்தி இருக்குமோ, அந்தப் பொருளே பிரம்ம சொரூபமாக விளங்குகிறது என்று தெளிந்த புத்தியானால் அறிந்திடுவாய்.

58. சொல்லுவதற்கு அகண்டதாக, சுகமய, ஆத்ம ஆனந்தத்தில் மிகச் சொற்பமான சுகத்தையே அடைந்தவரான பிரம்மா, விஷ்ணு, மகேச்வரர்களாகிய தேவர் முதலானோர், அவரவர் தமது தகுதிக்கேற்றவாறு இன்பமடைந்து பெருமையும், உயர்வும் உடையவராவர் என்பதை அறிவாயாக.

உபாதியுற் றூனேனு மொட்டாவின் போலவ்
வுபாதிதரு மங்களோ டொட்டா — னுபாதியிலான்
முற்றறிவ னேனுமுனி மூடனென வாயுபோற்
பற்றற்றுச் சஞ்சரிப் பான்பாரிற் — பற்றும் 52

உபாதிநா சத்தா லுறுவான் முனிவ
னுபாதியில் விஷ்ணுவி னுள்ளே — யபேதமே
தோயத்திற் றோயமுந் தூவிண்ணி லேவிண்ணுந்
தீயிற்றீ யும்போலத் தேர்வாய் — தூயதாம் 53

எவ்வடை விற்பிறி தேதுமடை தற்கின்றோ
வெவ்வின்பி னிற்பிறி தின்பின்றோ — வெவ்வறிவு
தன்னிற் பிறிதறிவு தானின்று மோவது
தன்னைப் பிரமமெனச் சார்ந்திடுக — பின்னும் 54

எதுகாணக் காண்டற் கெதுவுமே யின்றோ
வெதுவான பின்சன்ம மின்றோ — வெதுவறிந்த
பின்னறியத் தக்க பிறிதோர் பொருளின்றோ
வன்னது தான்பிரம மாகுமே — யின்னும் 55

எதுகுறுக்கு மேல்கீழா மெங்குநிறை வாகு
மெதுசச்சித் தின்பிரண் டில்ல — தெதனந்தம்
நித்தமா யொன்றாய் நிகழ்வதெது வாகுமவ்
வத்து பிரம மதித்திடுநீ — நித்தமாம் 56

ஏதழிவில் லாத தெதையன்றென் றன்றென்றே
வேத முடிவு விளக்கிடும் — யாதொன்
றகண்டவின் பாகி யமருமது தானே
திகழும் பிரமந் தெளிக — புகலவ் 57

அகண்ட சுகமய வான்மாவி லற்ப
சுகத்தை யடுத்தே சுரராய்த் — திகழும்
பிரமாதி யேனோர் பிறங்குவரின் புற்றுத்
தராதர மாகத் தரிப்பாய் — பரமாம் 58

59. பரமாகிய பிரம்மத்திடமே சகல பொருட்களும் உள்ளன. ஆகையால் விவகாரங்கள் எல்லாம் பிரம்மத்தை அனுசரித்தே செயல்படுகின்றன. அது எங்கும் பரவியுள்ளது. பாலில் நெய்யானது எங்கும் பரவி இருப்பதைப் போலவே எங்கும் பிரம்மம் நிலைத்திருக்கிறது.

60. வடிவமற்ற எந்த பொருளானது, தூல, சூட்சும, உற்பத்தி, நாசம் இல்லாததோ; குறுகியதாகவும், நீண்டதாகவும் இல்லாததோ; ரூபம், குணம், குலம், பெயர் கொள்ளாமல் இருப்பெதுவோ; அதைத் கூர்ந்து உணர்ந்து பிரம்மம் என்று அறிய வேண்டும்.

61. உள்ளுணர்வான எதனுடைய பிரகாசத்தினாலே சூரியன் முதலானவை ஒளிர்விக்கப் படுகின்றனவோ, இவைகளால் எதனை ஒளிரச் செய்ய இயலாதோ, எதன் ஒளிவினால் இந்த உலகமெல்லாம் பிரகாசிக்கின்றதோ அந்த வஸ்துவே பிரம்மம் என்று அறிந்து கொள்வாய்.

62. உயர்ந்து எரியும் அக்னிபோலவே பிரகாசிக்கும் இரும்புக் குண்டைப் போலவே, இந்த உலகிலுள்ள யாவையும் பிரகாசிக்கச் செய்து, தான் அந்த உலகின் உள்ளும் புறமும் வியாபித்து, அந்தப்பரம் பொருளானது சுயமாய்தானே பிரகாசிக்கிறது என்பதை ஆராய்ந்து அறிவாய்.

63. தான் இருக்கும் உலகைக் காட்டிலும் பிரம்மமானது அன்னியமாகத் தோன்றினாலும், அந்த பிரம்மத்திற்கு அன்னியமாக ஒரு அனுப்பிரமாணமான, பொருளும் இல்லை. அப்படி ஏதாவது அன்னியமாக தோன்றுமானால் அது கானல் நீரைப் போல முற்றிலும் பொய்யாகுமென்று அறிந்திடுவாய்.

64. முன்னே எந்தெந்தப் பொருள்கள் காணவும், கேட்கவும் இருக்கின்றனவோ, அதெல்லாம் பிரம்மத்திற்கு அன்னியமாக ஆகாது. தத்துவ ஞானத்தினால் பார்க்கும்போது யாவும் சச்சிதானந்த சொரூபமாகும். அதுவே இரண்டற்ற பரம் பொருளாகவும் பிரகாசிப்பது தெரியும்.

65. சச்சிதானந்த சொரூபமான ஆத்மாவை ஞானமே கண்ணாகப் பெற்றவன்தான் தரிசிப்பான். அஞ்ஞானியானவன் காண முடியாது. எங்கும் பிரகாசமான ஒளியுடன் விளங்கும் சூரியன் குருடன் பார்க்க முடியாதது போலாகுமென்று அறிவாய்.

அதனிடத் துள்ள தகிலமுஞ் செய்கை
யதையடுத் துள்ளதே யாகு — மதனுற்
பரவிடு மெல்லாம் பரம்பொருள் பாலில்
விரவிடு நெய்போல வேயஃ — தருவம் *59*

பருமையு நுண்மையுற் பத்தி விநாசங்
குறுகலு நீட்சியுங் கூடா — துருவங்
குணங்குல நாமமுங் கொள்ளாம லுள்ள
துணர்க பிரமமென் றுற்றுள் — ளுணர்வாம் *60*

எதனொளியி னுலொளிரு மேயிரவி யாதி
யெதனை யவையொளிர்க்க வேலா — தெதனுலே
யிந்தவுல கெல்லா மிலகு மதுதானே
யந்தப் பிரம மறிந்திடுக — வுந்தி *61*

ஒளிர்த்துலக மெல்லாந்தா னுள்வெளிவி யாபித்
தொளிர்ந்திடு மப்பிரம மோர்வா — யொளிரு
நெருப்பினிற் காய்ந்தங்கி நேரொளிரு மந்த
விருப்புண்டை யைப்போல வேதா — னிருக்கும் *62*

பிரம முலகிற் பிறிதாகு மந்தப்
பிரமத் தணுவில் பிறிதாய்ப் — பிரமத்திற்
கன்னிய மேது மவிர்ந்தா லதுமித்தை
யுன்னுக கானனீ ரொத்ததனே — முன்னில் *63*

எதுவெது காணவுங் கேட்கவு மேயு
மதுபிரமத் தன்னிய மாகா — ததுவுமே
தத்துவஞா னத்தினுற் சச்சிதா னந்தமா
மத்துவி தப்பிரம மாமறிக — வொத்தே *64*

சருவத்துஞ் சார்ந்ததாஞ் சச்சிதா னந்தப்
பிரமத்தை ஞானக்கண் பெற்றுன் — றரிசிப்பான்
ஞானக்கண் ணில்லாதா னண்ணனே காட்சியொளிர்
பானுவையந் தன்போலப் பார்மூட — னேனும் *65*

66. மூடனும், சிரவண, மனன, நிதித்யாசனாதிகளால் பிரகாசமடைந்த மனதை, ஞானாக்னியால் காய்ச்சி எடுத்தும், ஜீவன் சகல குற்றங்களும், தோஷங்களும் நீங்கியவனாய், புடம்போட்ட தங்கத்தைப்போன்று அதி நிர்மலமான ஆத்மாவாகப் பிரகாசிப்பான்.

67. விளங்கும் இதய ஆகாசத்தில் தோன்றிய ஞானோதயமாகிய ஆத்மா என்னும் சூரியன் அஞ்ஞானம் என்னும் இருட்டை அடியோடு நீக்கி, என்றும் பிரகாசிக்கும். அது எல்லாவற்றிடமும் வியாபித்து, அனைத்திற்கும் ஆதாரமாகத் தாங்கி நின்று யாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும். பலவாக செயலாற்றவும் செய்யும்.

68. திசை, தேசம், காலம் முதலானவற்றைத் தேடிப் போகாது என்றும், எல்லா திசைகளிலும் நீக்கமற நிறைந்து, குளிர், உஷ்ணம் போன்ற உபாதைகளை நீக்கக் கூடியதாய், எவ்வித களங்கமும் இல்லாத ஆனந்தமே உருவான தன் ஆத்ம சொரூபமாகிய தீர்த்தத்தினுள்ளே மூழ்கித் தோய்த்திருப்பவன் எவனோ, அவன் எந்த செய்கையுமற்றவனாய், யாவும் அறிந்தவனாய், எங்கும் நிறைந்து பிரகாசிப்பவனாய், மரணமற்றவனாய் ஆவான் என அறிவாய்.

*சிரவண மாதிகளாற் றேசுறு ஞான*
*வெரியினிற் காய்ச்சி யெடுக்கச் — சருவ*
*மலமும்போய்ச் சீவன் மறுவில்பொன் போனிர்*
*மலனாகித் தானொளிர் வானே — யிலகும்* 66

*இதயவெளி தோன்றி யிருளையழி ஞான*
*வுதயரவி யான்மா வொளிரு — நிதமுமே*
*யெல்லாவற் றும்பரவி யெல்லாமுந் தாங்கிநின்*
*றெல்லா மொளிர்விக்கு மெண்ணுக — பல்லாற்றும்* 67

*திக்கிடங் காலமுத றேடாம லென்றுமெத்*
*திக்குமார்ந் தேகுளிர்முன் றீர்ப்பதா — யெக்களங்கு*
*மற்றநித் யானந்த வான்மதீர்த் தத்துட்டோய்*
*வுற்றவ னார்செய்கை யொன்றின்றி — மற்றவன்*
*யாவு மறிந்தோனா யெங்குநிறைந் தாரமிர்த*
*னாவ னெனவே யறி.* 68